# <u>*மலரட்டும் புது வாழ்வு*</u>

சுத்தியலும் சாவியும் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டன. சாவியைப் பார்த்து சுத்தியல் மிகவும் பொறாமைப் பட்டது. மனவருத்தத்துடன் கேள்வி ஒன்றைக் கேட்டது: *“சாவியே, நீயும் பூட்டைத் திறக்கிறாய். நானும் பூட்டைத் திறக்கிறேன். உன்னைப் பையிலே போட்டு பத்திரப் படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் என்னையோ… மூலையில் தூக்கி எறிந்துவிடுகிறார்கள். கொஞ்சம் கூட மரியாதையில்லாமல்! அது ஏன்?”* அது ஏன் என்பதனைப் பொறுத்துஎதிர் காலம் அமையும். **“Make America great again! ”**புதிய ஜனாதிபதி இர(ஸ்)யாவிடம் நட்புக் கரம் நீட்டுகின்றார். இஸ்ராயேலுடன் நட்புக் கரம் நீட்டுகிறார். புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்றார். புதிய ஆயுள் காப்பு முறைகளை உட்புகுத்தப் போவதாகக் கூறுகின்றார். இவர் சாவியா, சுத்தியலா? ஆவலுடன் காத்திருந்து கவனிக்கும் இந்நேரத்தில், திருச்சபையின் திருவழிப்பாடு கிறிஸ்துவின் பெருவருகைக் காலவிழாக்களை மிகவேகமாக முடித்துக் கொண்டு ஆண்டின் பொதுக் காலத்தினுள் காலடி எடுத்து வைக்கின்றது. திருக் குழந்தையாக எம் நடுவில் பிறந்த கிறிஸ்து, இப்போது முப்பது வயது முடிந்துவிட்டவராக யோர் தான் நதியில் மக்களோடு மக்களாக திருமுழுக்கு யோவான் முன் தலை வணங்குகின்றார். இவர் பிறப்பின் நோக்கமெல்லாம் எம்மோடு வாழவேண்டு மென்பதே., எம்மை வாழவைக்க எம்மோடு ஒருவராகிறார். இப்போது அவர் கடவுள் மட்டுமல்ல, மனிதனும் கூட. எனவே எங்கள் உள்ளங்கள் பேசுகின்ற மொழி அவருக்குத் தெரியும். ஆகவே நாம் பேசலாம். எம் உணர்வுகள் பேசலாம், எண்ணங்கள் பேசலாம், மனங்கள் பேசலாம், இதயங்கள் பேசலாம். எங்களுக்குத் தான் எத்தனை எத்தனை ஆசைகள்! சோர்ந்து போன உள்ளங்களுக்கு சொர்க்கம் பார்க்க ஆசை, சுமை, சுமந்த தோள்களுக்கு சுகம் காண ஆசை, வறண்டு போன கண்களுக்கு சிரிக்க கொஞ்சம் ஆசை, அலைமோதும் ஆன்மாக்களுக்கு அமைதிகாண ஆசை, ஆசைகள் அனைத்தையும் தீர்த்துக் கொள்ள, அவரோடு நாம் பேசலாம். அவரால் ஆகாதது ஒன்றுமில்லை என்று நாம் நம்புவதால், எம் வாழ்க்கையில் நிச்சயம் புது வசந்தம் பிறக்கும் என்று நம்பலாம். அந்த வசந்தத்தில் உண்ண உணவு கிடைக்கும், இருக்க இடம் கிடைக்கும், உடுக்க உடை கிடைக்கும், அருளுக்கு மேல் அருள் கிடைக்கும், ஆசிக்கு மேல் ஆசிகிடைக்கும், வாழ்வுக்கு மேல் வாழ்வுகிடைக்கும். **“Make every country great again!”** என்று நாம் கூறலாம். அவர் நினைத்தால் உலகனைத்திற்கும் அது முடியும்.

*ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே பேரா இயற்கைதரும்.* (குறள் 370).

(ஆசை அளவின்றிப் பெருகும் இயல்புடையது. ஆந்த ஆசையை அகற்றி வாழும் நிலையைப் பெற்றுவிட்டால், நீங்கா இன்பமாகிய பேரின்பத்தை இயல்பாகவே கொண்டு வந்து சேர்க்கும்.) பற்றற்றவன் தாள் பற்றும் நிலை அனைவருக்கும் புத்தாண்டு அருட் கொடையாக அமைவதாக.

கிறிஸ்துவில் அன்புடன்,

**Rev. Fr. Tiburtius Fernandez. SMA**